# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப, (ஓ),
************

மனு எண்: 523 /2017/ஊராட்சி

ஆணை எண்: 69/2017

நாள்: 20/04/2017

டாக்டர். N. தேவ சுந்தரம்,
108/F, ஜெயபிரகாஷ்புரம்,
சாமிநாதபுரம் Po.
மொடக்குறிச்சி (வழி)
ஈரோடு. - மனுதாரர்

வட்டார வளர்ச்சி அலுவலர்,
மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம்,
ஈரோடு மாவட்டம். - எதிர் மனுதாரர்

## ஆணை

மொடக்குறிச்சி வட்டம், 108/F, ஜெயபிரகாஷ்புரத்தில் குடியிருக்கும் திரு. என். தேவசுந்தரம் என்பவர் அவருடைய 11.4.2017 நாளிட்ட மனுவில் அவரது வீட்டிற்கு குடிநீர் இணைப்பு வேண்டி 31.10.2013 அன்று நஞ்சைஊத்துக்குளி பஞ்சாயத்து அலுவலகத்தில் ரூ.1,700/- கட்டி, குடிநீர் இணைப்பு பெற்றார் என்றும், ஆனால் 26.11.2016 அன்று அவரது வீட்டின் குடிநீர் இணைப்பை துண்டித்துவிட்டு, குடிநீர் குழாயை மொடக்குறிச்சி B.D.O. திருமதி. சசிகலா அவர்களின் உத்தரவின் பேரில் பணிபுரிந்த நபர்கள் உடைத்துவிட்டார்கள் என்றும், இது குறித்து தகவல் அறியும் சட்டத்தின் கீழ் காரணம் கேட்டதற்கு, தண்ணீர் பற்றாக் குறையை காரணம் காண்பித்து குடிநீர் குழாய் துண்டிக்கப்பட்டதாக தெரிவித்ததாகவும், ஆனால் இது குறித்து நுகர்வோர் அமைப்பின் செயலாளருக்கு அனுப்பிய பதிலில் மனுதாரர் மூன்று வருடம் வீட்டு வரி கட்டாததால் குடிநீர் குழாய்

இணைப்பை துண்டிக்கப்பட்டதாகவும் முன்னுக்குபின் முரணான பதிலை தந்துள்ளார் என்றும், அவரது முறையான இணைப்பை முன் அறிவிப்பின்றி துண்டித்தது சட்டத்திற்கு விரோதமானது எனத் தெரிவித்து, விசாரணை நடத்தி, துண்டிக்கப்பட்ட இணைப்பை மீண்டும் பெற்றுத் தரவும், அவருக்கு ஏற்பட்ட மன உளைச்சலுக்கு நஷ்ட ஈடு தொகை கிடைக்க ஆவண செய்யுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

2. 2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 2, உட்பிரிவு (7)ன்படி "உள்ளாட்சி அமைப்பு" என்பதற்கான பொருளில் "ஊராட்சி மன்றம்" மற்றும் "ஊராட்சி ஒன்றியம்" என்ற அமைப்புகள் வரையறுக்கப்படவில்லை. இம்மனு நஞ்சை ஊத்துக்குளி ஊராட்சி சார்ந்தது ஆகும், எனவே இம்மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாது. எனவே இம்மனுவினை மாவட்ட ஆட்சித் தலைவர், ஈரோடு மாவட்டம் அவர்களுக்கு தக்க நடவடிக்கைக்காக மேலனுப்ப முடிவு செய்யப்பட்டு, அவ்வாறே அனுப்பப்படுகிறது. மேலும் இப்பொருள் குறித்து ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகுமாறு மனுதாருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள் 20-ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

**செயலாளர்.**

<u>பெறுநர்</u>

டாக்டர் N. தேவ சுந்தரம்,
108/F, ஜெயிரகாஷ்புரம்,
சாமிநாதபுரம் (Po.),
மொடக்குறிச்சி (வழி),
ஈரோடு.

**நகல்:**

மாவட்ட ஆட்சித் தலைவர்,
ஈரோடு மாவட்டம்,
ஈரோடு. (இணைப்புகளுடன்)